1994 மே 2]

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

பெரியார் மாவட்டத்தில் மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், வடக்குப்புதுப்பாளையம் கிராமத்தில் சலவைத் தொழிலாளர்களுக்கு இலவசமாக சலவைப்பெட்டிகள் அம்மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரால் பராமரிக்கப்படும் முதுநிலைப் பட்டியலின்படி (Seniority) தகுதியான சலவையாளர்களுக்கு அளிக்கப்படும். சலவையாளர்களுக்கு இல்லங்கள் கட்டித்தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

476—

லெனின் நகர் பகுதியை அம்பத்தூர் நகராட்சியுடன் இணைத்தல்

** 21116—திரு. கோ. காளன்:*

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூரிலுள்ள லெனின் நகர் பகுதியை அம்பத்தூர் நகராட்சியுடன் இணைத்து அரசு 1992–ஆம் ஆண்டு ஆணை வெளியிட்டும், இதுவரை எந்தத் தொடர் நடவடிக்கையும் எடுக்கப்படாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து உடனடி நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : அம்பத்தூர் நகராட்சியுடன் லெனின்நகர் மற்றும் நெற்குன்றம் பஞ்சாயத்து பகுதியை இணைப்பதற்கு அரசு ஆணை எண் 194, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 30-7-1992-ல் ஆணை வெளியிடப்பட்டது. மேற்கண்ட அரசு ஆணையின் செயலாக்கத்திற்கு உயர்நீதி மன்றத்தில் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இத்தடை உத்தரவினை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS